REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 29உ செவ்வாய் (15—10—57) ★ ☆ வெளியூர்: புரட்டாசி 30உ புதன் (16—10—57) [இதழ் 105

இந்தி பேசப்படாத பகுதிகளில் இந்தியைப் பரப்புவதற்குத் திட்டம்

புதுடில்லி, அக். 15—

இந்தி பேசப்படாத பகுதிகளிலுள்ள இந்தி ஆசிரியர்களை இந்தி பேசும் பகுதிகளுக்கு வரவழைத்து அடிக்கடி விவாத அரங்கு நடத்த மத்திய கல்வி இலாகா திட்டம் தீட்டியுள்ளது.

இதேபோன்று, இந்தி பேசும் பகுதிகளிலிருந்து இந்தி பேசப்படாத பகுதிகளுக்கு ஆசிரியர்களை அனுப்பி விவாத அரங்கு நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

'உயர்நிலைப்பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்குக'

சென்னை சர்க்காருக்கு டெல்லியின் தாக்கீது?

புதிய கொள்கையாம்! ஏற்றுத்தானாக வேண்டுமாம்

புதுடில்லி, அக். 14—

இந்தியை உயர்நிலைப் பள்ளிகளில் கட்டாயபாடமாக்க வேண்டும் என்று சென்னை சர்க்காருக்கு டெல்லி சர்க்கார் ஒரு தாக்கீது அனுப்பியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவிலேயே சென்னையில் மட்டும்தான் இந்தி கட்டாய பாடமாகப் பள்ளிகளில் போதிக்கப்படவில்லை என்றும், எனவே உடனடியாக இந்தியைக் கட்டாயபாடமாக்கவேண்டுமென்றும் மாநில சர்க்காருக்கு மத்திய கல்வி இலாகா அனுப்பியுள்ள தாக்கீது மூலம் உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

செகண்டரி கல்விக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில், புதிய மொழிக் கொள்கை ஒன்றை உருவாக்கியிருப்பதாகவும், அந்தக் கொள்கையை மாநில சர்க்கார்கள் கட்டாயமாக அனுசரிக்க வேண்டும் என்றும் டெல்லியின் தாக்கீது கூறுகிறதாம்.

கீழ்க்கண்டபடி உயர்நிலைப்பள்ளிகளில் மொழிக் கல்வி இருக்க வேண்டுமென மாநில சர்க்கார்களை டெல்லி கேட்டிருக்கிறதாம்:

(1) தாய் மொழி அல்லது பிரதேச மொழி; அல்லது, தாய்மொழி—பிரதேச மொழி இரண்டின் கூட்டுப்படிப்பு; அல்லது, தாய் மொழி, ஏதாவதொரு செம்மொழி இரண்டின் கூட்டுப்படிப்பு; அல்லது, பிரதேச மொழி, மற்றும் ஒரு செம்மொழி இவற்றின் கூட்டுப்படிப்பு.

(2) ஆங்கிலம் அல்லது நவீன ஐரோப்பிய மொழிகளுள் ஒன்று.

(3) இந்தி வழங்காத பகுதிகளில் இந்தி; இந்தி வழங்கும் பகுதிகளில் ஏதாவது ஒரு வடநாட்டு மொழி.

இந்தப் புதிய கொள்கையின்படிதான் மாநில சர்க்கார் உயர்நிலைப் பள்ளிகளில் மொழிக் கல்வி அளிக்க வேண்டுமாம்!

ஐ. நா. பிரதிநிதிக்கு அனுமதி மறுப்பு

புதாபெஸ்ட், அக். 14—

ஹங்கேரியில் கடந்த அக்டோபர் திங்களில் தோன்றிய தேசிய எழுச்சி பற்றி ஐ. நா. ஒரு விசாரணைக் குழுவை நியமித்ததும், பின்னர் அதன் அறிக்கைக்குப் பிறகு ஐ. நா. பொதுச்சபையின் தலைவராயிருந்த வான் வாத்தியாகன் ஹங்கேரிக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துவர வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டதும் தெரிந்ததே.

இப்போது அதன்படி, ஐ. நா. சார்பில் வான் வாத்தியாகன் ஹங்கேரி செல்ல முயற்சித்த போது, அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

இந்தத் தகவலை உறுதி செய்துள்ள ஹங்கேரி அதிகாரி ஒருவர், ஐ. நா. இந்த விவகாரம் குறித்து ஆராய்ச்சி செய்வது, ஹங்கேரியின் உள் விவகாரங்களில் தலையிடுவதாகும் என்று கூறியுள்ளார்.

வரலாற்றில் இடம் பெற்ற சென்னை இரட்டையர்

ஏ. ஆர்., ஏ. எல். வாழ்க்கைப் புதுமைகள்

சென்னை, அக். 15—

காங்கிரஸ் ஆட்சிக்குட்பட்ட இந்தியாவில் 70 ஆண்டுகள் உயிர் வாழ்வதே ஒரு அதிசயம்; ஆனால், இந்தக் கருத்துக்கு விலக்காக—தென்னகத்தின் எடுத்துக்காட்டாக—ஏன், வடவரில்கூட காணப்படாத அறிவும், ஆற்றலும், திறமையும், தகுதியும் பெற்று விளங்கும் டாக்டர் ஏ. இராமசாமி முதலியார், டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார்—இரட்டையர்—ஆகியவர்கள் இன்றுடன் 69 ஆண்டுகள் நிரம்பி 70-வது ஆண்டில் நுழைந்துள்ளனர்.

ஒரே தாய் வயிற்றில் ஒரே சமயத்தில் பிறந்த இரட்டையர் பலருண்டு; ஆனால் இவர்களைப் போன்று 70 ஆண்டுகள் அடைந்து சிறப்புப் பெற்று, நற்பணியாற்றி, ஒத்தபுகழ் பெற்றவர்கள் வரலாற்றில் இல்லை என்றே கூறவேண்டும்.

தென்னாட்டில் கர்னூல் பகுதியில் 1887-ம் ஆண்டு அக்டோபர் 14-ந் தேதி, ஒருதாய் வயிற்றில் திரு. இராமசாமியும், அவருக்குப் பின்னர் 45 நிமிடம் கழித்து திரு. இலட்சுமணசாமியும் பிறந்தனர்.

இருவரும் ஒரேமாதிரியான தோற்றமும், ஒரே மாதிரியான வாழ்க்கைத்துறை வெற்றிகளும் கண்டவர்கள்.

திரு. இராமசாமி, சட்டமும் அரசியலும் பயின்றார்; திரு. இலட்சுமணசாமி வைத்தியம் கற்றார். இருவரும் வெற்றிக்கு மேல் வெற்றியடைந்தவர்களாவர். வெள்ளையர் ஆட்சியில் இருவரும் 'சர்' பட்டம் பெற்றனர். நீதிக்கட்சிக்கு நற்பணியாற்றிவந்தனர்.

1947-க்கு முன் இருவரும் உலகநாடுகளைச் சுற்றி பல அரிய உண்மைகளைக் கண்டனர்.

இருவரும் உலக அரங்கிலும், ஐ. நா. அவையிலும் அங்கம் வகித்து அயலாரின் பாராட்டுதலைப் பெற்றவர்கள்.

ஐ. நா. சபையின் கூட்டத்திலும், குழுக்களிலும் திரு. இராமசாமி கலந்துகொண்டும், உலக சுகாதார நிறுவனத்திலும், உலக கல்வி — கலாச்சார — சமுதாய நிறுவனத்திலும் திரு. இலக்குமணசாமி பங்கு கொண்டும் நாட்டுக்குப் பெருமை தேடித்தந்தவர்கள்.

பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களாகவும் இருவரும் தொண்டு புரிந்துவந்துள்ளனர்; திரு. இராமசாமி திருவனந்தபுரம் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தார்; திரு. இலட்சுமணசாமி பலமுறை சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக சிறப்புடன் தொடர்ந்து பதவி வகித்து வருகிறார்.

சட்டமன்றங்களிலேயும் இருவரும் ஒத்த உரிய இடம் பெற்றனர்; திரு. இராமசாமி டில்லி மாநில சபை உறுப்பினர்; திரு. இலட்சுமணசாமி சென்னை மேல் சபை உறுப்பினர்.

வெளிநாடுகளிலும் இருவருக்கு ஒத்த மதிப்பும் கௌரவமும் தரப்பட்டுள்ளது. இலண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் இருவரும் 'டாக்டர் ஆப் சிவில் லாஸ்' பட்டம் பெற்றுள்ளனர். இந்த மதிப்பு, சாதாரணமாக கிடைக்கக் கூடியதல்ல!

அவர்கள் இன்று 70-ம் ஆண்டை அடைந்ததைக் கண்டு நாம் பெருமைப்படுவதோடு, அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழவேண்டும் என்று விரும்புவதோடு, தென்னாட்டிற்கு மேலும் சிறப்பைத் தேடித்தர வேண்டுகிறோம்.

இந்தி மொழித் திணிப்பால் வட்டார மொழிகளுக்கு ஆபத்து இல்லையாம்!

இந்தியை வளப்படுத்த இதர மொழிகள் உதவ வேண்டுமாம்!

மத்திய அமைச்சர் செகசீவன் ராம் கூற்று

சென்னை, அக். 15—

"இந்தியைப் பரப்பும் வேலை, இந்தி பேசும் மக்களுடையது அல்ல என்று நான் கருதுகிறேன்; அவர்களால் இந்தியைப் பரப்ப முடியாது; இந்தி பேசாத மக்களால்தான் இந்தி பரவும் வேலையை வெற்றிகரமாகச் செய்ய முடியும். இந்தி பேசாத பகுதிகளில் உள்ள மேதைகள்தான் இந்தியை வளப்படுத்த முடியும்"

என்று, மத்திய இரயில்வே மந்திரி செகசீவன் ராம், இந்தி பிரச்சார சபையின் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டாராம்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தியை ஆட்சிமொழியாக்குவதினால் பிரதேச மொழிகளின் முக்கியத்துவம் குறைந்துவிடும் என்று சிலர் அச்சம் தெரிவிக்கிறார்கள்; இந்தப் பயத்திற்குக் காரணமே இல்லை.

"இந்திக்கும் இதர பிரதேச மொழிகளுக்கும் சண்டை ஏற்பட வழியே இல்லை.

"இந்தி வளமான மொழி என்பதால் அல்ல, ஆட்சிமொழி ஆக்கப்பட்டது. இதர மொழிகள் சிலவற்றில் இந்தியைவிட வளமான இலக்கியங்கள் உண்டு. இந்த மொழிகள் எல்லாம் இந்தி வளம்பெற உதவ வேண்டும் என்று விரும்புகிறேன்."

இந்தியாவுக்கு அமெரிக்கக் கோதுமை

புதுடில்லி, அக். 14—

இந்திய நாணயங்களைக் கொடுத்து, 2,09,45,800 டாலர் மதிப்புள்ள கோதுமை அல்லது கோதுமை மாவை இந்திய அரசாங்கம், அமெரிக்காவிடம் வாங்கிக் கொள்வதற்கு உடன்பாடு செய்துகொண்டுள்ளது.

சேதி கேட்டீரா?

புதுடில்லி, அக். 14—

படாஸ்கர் அறிக்கையை அமுல் நடத்தும் முறையில் அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் சட்டம் வராது என்று தெரியவருகிறது.

இந்திதான் இந்தியாவின் தேசீய மொழியாம்!

முதலமைச்சர் நம்பூதிரிபாதின் துணிச்சல்!

இந்திதான் இந்தியாவின் பொது மொழி ஆகவேண்டுமாம்! இதில் எவரும் தகராறு செய்வதற்கு இடமில்லையாம்!

இந்தக் கருத்தை, துணிவுடன் வெளியிட்டிருப்பவர், கேரள முதன் மந்திரி நம்பூதிரிபாத்!

வெளியிட்ட இடமோ மதுரை!

நேற்று முன்தினம் நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"மாநிலங்களுக்கிடையே தொடர்பு, மத்திய சர்க்கார் நிர்வாகம் இவற்றிற்கு ஆட்சி மொழியாக எதை உபயோகிப்பது என்பதும், ஆங்கிலத்தையே தொடர்ந்து நீடிக்கலாமா என்பதும் பிரச்சினை; ஆனால், தேவைப்படுகிற காலத்திற்குமேல் ஒரு கணம்கூட நாம் ஆங்கிலத்தை வைத்துக்கொள்ள முடியாது; ஏனெனில், அது அன்னியரின்—ஆதிக்கக்காரரின், மொழி.

"மாநிலங்களுக்கிடையே தொடர்புகொள்ளும் மொழியாகவும் இந்தியாவின் தேசீய மொழி(!)யாகவும் இந்திதான் இருக்கவேண்டும்; இந்திக்கு உள்ள அந்த உரிமையை யாரும் மறுத்துரைக்கமுடியாது!

பம்பாய் உபதேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி

பம்பாய் சட்ட சபைக்கு நகரத் தொகுதி ஒன்றில் நடைபெற்ற உப தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியடைந்திருக்கிறது.

காமதிபுரா — மஹூசான் — நாகபாத தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரான டாக்டர் ரபீக் ஜகாரியா என்பாரைவிட 512 வாக்குகள் அதிகம் பெற்று வி. ஆர். துல்லா என்ற சம்யுக்த மாராட்டிய சமிதி அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார்.

திருச்சூரில் மற்றுமோர் பொறியியல் கல்லூரி

கேரள மாநிலத்தில் தற்போது திருவனந்தபுரத்தில் ஒரு பொறியியல் கல்லூரி உள்ளது; மற்றொரு கல்லூரியைத் துவக்க திருச்சூரில் இராமவர்மாபுரத்தை கேரள அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது.

நம் நாடு

சென்னை 15—10—'57 செவ்வாய்

இறுதி எச்சரிக்கை!

எரிமலை வெடிக்குமுன் குமுறும் என்பார்கள். தமிழகம் நேற்று முன்தினம் ஒருநாள் குமுறியது—வெடிக்கவில்லை.

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, கனலாகத்தான் இருக்கிறது தமிழ்நாட்டில்; வடவர் தங்களின் தற்காலத்திய இராஜ தர்பாரால் விசிறுவார்களானால், அந்தக் கனலிலிருந்து பெருநெருப்பு கொழுந்துவிட்டெரியும் என்ற உண்மையைப் பலமுறை நாம் இங்கு குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால், இன்றையத் தமிழகத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்ட வடவர், தங்களது 'ஏக இந்திய' ஏகாதிபத்தியத்தை, அசைக்க முடியாத கற்கோட்டையாக்கிவிட வேண்டும் என்ற நப்பாசைத் துடிப்பால், இந்தித் திணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கி வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகள் பற்றிய தென்னாட்டு மக்களின் உள்ளக் கொதிப்பை, முறையான இடத்தில், உரியவகையில் எடுத்துரைத்தார் தோழர் சம்பத்.

பின், திருவண்ணாமலை மாநாடு, வடவர் தங்களது ஏகாதிபத்திய வெறியாட்டத்திற்கு எந்த அரசியல் சட்டத்தில் நியாயம் காண முற்படுகிறார்களோ அந்தச் சட்டத்திற்கும், இன்றையத் தமிழகத்திற்கும் உள்ள உறவின் முறையை தெளிவாக்கியதுடன், வெறியால் நிதானமிழந்து சுழன்று கொண்டிருக்கும் தங்களது கண்களை, அவர்கள் ஒருநிலைப் படுத்தி, கூர்ந்து கவனிக்க வேண்டிய இந்த நாட்டு மக்களின் உள்ளப்பாங்கையும் சுட்டிக்காட்டியது.

அந்த உள்ளப்பாங்கினை மேலும் பிரகாசமாக—தெளிவாக வெளிக்காட்டும்படி, வடவரின் நலன் கருதி, நமது பொதுச்செயலாளர் அவர்கள், 'அக்டோபர் 13' — கொண்டாடும்படி அந்த மாநாட்டில் தான் தமிழ்மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். தமிழகம் அன்று தனது உள்ளக்குமுறலை வெளிக் காட்டியிருக்கிறது. அந்தகனும் அறியும் வண்ணம்!

தென்னாட்டினை வடநாட்டிற்கு அடிமைப்படுத்துகிற சாசனமாக விளங்கும் இந்திய அரசியல் சட்டத்தில், தென்னாட்டு மக்களின் பொறுப்புடைய பிரதிநிதிகளுக்குப் பங்கு இருக்கவில்லை என்ற உண்மையையும் மூடி மறைத்துவிட்டு, அத்தகைய ஒரு சட்டத்தின் சில விதிகளை, தங்களது வெறிகொண்ட மூர்க்கத்தனமான நடவடிக்கைகளுக்குப் புகலிடமாகக் கொள்ள நினைக்கின்றனர், வடவர்! இந்தப் போக்கில் உள்ள அநீதிக்கு வெளிச்சமிடத்தேவையில்லை. இத்தகு அவக்கேடான அரசியல் சட்டத்தின் 344-வது விதியின் முதல் பிரிவின்படி, கேர் என்பார் தலைமையில், இரண்டொருவரைத் தவிர, முழுவதும் இந்தி வெறியர்களைக்கொண்டு அமைக்கப்பட்ட குழு, தனது அறிக்கை மூலம், டெல்லி பெரியவர்களின் வெறியாட்டத்திற்குக் கொட்டுமேளம் கொட்டிவிட்டது. இந்தக் கொட்டுமேளத்தின் சுருதி சுத்தம் பற்றி ஆராய்ந்து சிபாரிசு செய்வதற்காக அதே விதியின் 5-வது பிரிவின்படி, பாராளுமன்ற உறுப்பினர்களடங்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குழுவினர், கேர் குழு அறிக்கையைப் பரிசீலித்து, இரண்டொரு தினங்களுக்குள் தங்களது சிபாரிசுகளை வெளியிடவிருக்கிறார்கள். இவர்களும் கேர் குழுவினர் செய்த தவறினையே செய்யப் போகிறார்களா?

'இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்கவேண்டும்; இந்தி திணிக்கப்படக் கூடாது' என்ற கருத்தை, எல்லாவகையான ஆதார நியாயங்களையும் கொடுத்து விளக்கி அதுதான் தமிழ் நாட்டின்—தென்னாட்டின் கருத்து என்று, தமிழகத் தலைவர்கள் பலரும் கேர் குழுவினரிடம் அறிக்கை தந்தனர்; கேர் குழு அதனை மதிக்கவில்லை.

இப்போது பாராளுமன்ற உறுப்பினர் குழுவும் இதே தவறினைச் செய்யக்கூடாது என்பதற்காகவும்தான், 'அக்டோபர் 13'—தமிழகத்தின் குமுறல்.

தங்களது விடுதலைக்கும், எல்லாத் துறை நலன்களுக்கும் தென்னாட்டவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுப்பாக்கியுள்ளனர் என்பதைத்தான் இந்தித் திணிப்பிற்கு எதிரான தங்களது நியாயமான உணர்ச்சியை—எழுச்சியை, தி. மு. கழகத்தின் தலைமையில், அக்டோபர் பதின்மூன்றும் நாளன்று இலட்சக்கணக்கில் திரண்டு நின்று ஜனநாயகபூர்வமாக முறையான வகையில் வெளிக்காட்டியுள்ளனர்.

தங்களது எதிர்காலம் பற்றிய இந்த இந்தித் திணிப்பு விஷயத்தில் தென்னாட்டவர் விட்டுக் கொடுப்பதற்கு எதுவுமில்லை.

ஜனநாயகச் சம்பிரதாயங்களைப் பிழையறக் கைக்கொண்டு, சட்டவரம்புகளுக்கு உட்பட்டு தென்னாட்டவர் தெரிவிக்கும் இந்த நியாயமான எதிர்ப்பு, தென்னாட்டின்மீது நிரந்தரமான ஆதிக்கம் என்ற பேராசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக, இந்தத் திணிப்பைத் திட்டமிட்ட வழியாகக் கொண்டு வேகமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் வடநாட்டவருக்கு ஒரு இறுதி எச்சரிக்கை—சிவப்பு விளக்கு.

இதைத்தான், பாராளுமன்றக் குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள், தங்கள் சிபாரிசாக அல்ல—அறிவுரையாக டெல்லிக்குத் தரவேண்டுமென தென்னாட்டவர் விரும்புகிறார்கள்.

முட்டிவிட்டுக் குனிவதில் பிரியம் காணும் வடவர்கள், 'அக்டோபர் 13'-ல் தமிழகம் உருக்கொண்ட போர்க்கோலத்தை — வெளிக்காட்டிய உள்ளப்பாங்கை—எழுப்பிய குரலை சரியானபடி எடைபிடத் தவறிவிடுவார்களேயானால், முன்பொருமுறை நாம் இங்கு குறிப்பிட்டிருந்தபடி, அவர்கள் விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் விழுகிறவர்களாகத் தான் இருக்கமுடியும்.

சுவாமி அருணகிரி அடிகளார் மணிவிழா

அடிகளாரின் தமிழ்த் தொண்டுக்குப் பாராட்டு

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கலந்துகொண்டார்

சென்னை, அக். 10—

6—10—57 மாலை 4 மணிக்கு, சென்னை — திருவொற்றியூர் செஞ்சாலையிலுள்ள சாது நாராயணசாமி தேசிகர் நிலையத்தில், முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சர்வாதிகாரியாகப் பணி பணியாற்றிய சுவாமி அருணகிரி அடிகளாரின் மணிவிழா, சென்னை நகரமன்றத் துணை ஆணையாளர் திரு. சங்கரன் அவர்கள் தலைமையில் சிறப்பானமுறையில் நடைபெற்றது.

அவர் தனது தலைமையுரையில், அடிகளாரின் விழாவில் தான் கலந்துகொள்வது தனக்கொரு குடும்ப நிகழ்ச்சி போன்றதென்றும், அவருடைய தொண்டு தமிழகத்திற்குச் சிறந்த பலனை அளித்திருக்கிறதென்றும், அவர் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை யென்றும் பாராட்டி, 'தமிழ் மொழிக்கு ஏதாவது தீமை—தாழ்வு வருமானால் உண்மையான தமிழன் பொறுத்துக் கொள்ளமாட்டான்; அந்த வகையிலே அடிகளார் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டார்' என்று குறிப்பிட்டார்.

பின்னர் அடிகளாருக்கு ஏராளமான வாழ்த்துக்களும்—பரிசுகளும்—மலர் மாலைகளும் அளிக்கப்பட்டு பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து, தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் அடிகளாரைப் பாராட்டி, உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :—

"இன்று இம்மணிவிழாவைக் காணும்போது எனக்கு 1938-ம் ஆண்டுதான் நினைவுக்கு வருகிறது. இது இந்தி எதிர்ப்பு மாநாடு போல் காட்சியளிக்கிறது. 1938-ல் இந்தி எதிர்ப்புப்போராட்டத் தலைவர்களில் ஒருவராயிருந்த அருணகிரி அடிகளாருக்கு மணிவிழா நடைபெறுகிறது; இந்த அன்றைய இந்தி எதிர்ப்புப் போரில் கலந்துகொண்ட அத்தனைபேரும் வந்திருக்கிறார்கள் என்றால், இது ஒரு இந்தி எதிர்ப்பு மாநாடோ என்று ஐயுறுகின்றேன். காரணம், நாட்டிலே இன்றையதினம் அந்தச் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

"அருணகிரி அடிகளாரின் வாழ்க்கை வரலாறு அவரை நல்ல ஒரு கர்ம வீரராக்கியிருக்கிறது. அடிகளார் அவர்கள் எங்களுக்கு—நான் தொடர்புகொண்டிருக்கிற இயக்கத்துக்குத் தொண்டாற்றியிருக்கிறார். எனவே, இது எங்களுடைய குடும்பத்தில் நடைபெறும் நிகழ்ச்சி; ஆகையால், இதில் நாங்கள் உரிமையுடன் கலந்து கொள்கிறோம். மற்றும் பல்வேறு கருத்துகொண்ட பலரும் இவ் விழாவில் கலந்துகொள்கிறார்கள் என்றால், அது மணிவிழாவின் தூய்மைக்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும்."

மேலும் அவர், அடிகளாரின் தொண்டினை விவரித்து விட்டு இறுதியாகக் குறிப்பிட்டதாவது:

"அடிகளாரின் நல்ல அறிவு தமிழர்களுக்கு நல்ல முறையிலே பயன்பட வேண்டும்; அடிகளாரின் நல்ல தொண்டு தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன்பட வேண்டும். மணிவிழாமலரில்பலர் தங்கள் வாழ்க்கையிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகளை — எண்ணங்களை வெளியிட்டு அவருடைய மணிவிழாவைப் பாராட்டியிருக்கிறார்கள். இப்பலருக்கு பலரின் பாராட்டுதல்களால் மட்டும் சிறப்பு ஏற்படுமென்பதல்ல; அவருடைய தொண்டாலும் இது சிறப்படையும்.

"உண்மையான துறவிக்கு மக்கள்தான் குழந்தைகள்; நாடுதான் அவர்களுக்கு இருப்பிடம்; மொழிதான் அவர்களுக்கு மூச்சு. அந்த வகையிலே பாடுபட்டு வருபவர் அருணகிரி அடிகளார் அவர்கள். எனவே, இந்த நல்லவரின் மணிவிழா நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கட்டும்"

தலைமைக் கழகத்தின் சார்பில் அடிகளாருக்கு துணைப்பொதுச் செயலாளர் மலர்மாலை அணிவித்தார்.

அடுத்துப் பேசிய பேராசிரியர் மயிலை-சிவமுத்து அவர்கள், அடிகளாரின் தொண்டினை வெகுவாகப் பாராட்டிப் பேசுகையில், "அடிகளாரே! உங்களுக்கு மணிவிழா; நாங்கள் இப்பொழுது இதை இந்தியை ஒழிக்கத் துவங்கியிருக்கும் வைர விழாவாகக் கொள்ளுகின்றோம்; இந்தியை முதன் முதல் தமிழ் நாட்டில் தான் எதிர்த்தோம்; ஆனால், இப்பொழுது தென்னாடு முழுவதிலும் இந்தியை விரட்டும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பல பெரியவர்கள் முன்வந்திருக்கிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

அடுத்து திரு. முருகேச பாகவதர் பேசுகையில், "இமயத்தில் பனிவிளைகிறது — பொதிகையில் சந்தனம் விளைகிறது; அடிகளாரிடம் வீரம் விளைகிறது"—என்று குறிப்பிட்டார்.

அடுத்து பேராசிரியர் அன்புக்கணபதி, தோழர்கள் சண்முகம் வி. ப. தண்டபாணி, இராமகோட்டி ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர்.

பின்னர், காஞ்சி-மணிமொழியார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஞானிகள் எதைத் துறந்தாலும் மக்களின் காதலைத் துறக்கவில்லை; அந்த வகையில் அருணகிரி அடிகளார், 'வீட்டைத் துறந்தேன்—நாட்டைத் துறக்கவில்லை; இல்லறத்தைத் துறந்தேன்—மொழியைத் துறக்கவில்லை' என்று திருவண்ணாமலை மாநாட்டில் பேசினார்; இந்த உலகம், தனக்கென 'வாழாப் பிறர்க்குரியாளர்'களால் தான் வாழ்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக அடிகளார் இருக்கிறார். சிறிது உணர்ச்சி பெற்றிருந்தவர்கள் ஆனாலும் பெற்ற தாய்மொழி தமிழையும், பிறந்த நாடு தமிழ் நாட்டையும் மறக்க மாட்டார்கள்.

"தமிழகத்தில் மீண்டும் ஓர் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றால் அதில் எல்லோரும் ஈடுபடுவார்கள்—எல்லோரும் இந்தியை எதிர்ப்பார்கள். அருணகிரி அடிகளாரும்—மற்ற அடிகளார்களும் இந்தி எதிர்ப்புப் போர்க்களத்திலே குதிக்க வேண்டுகிறேன்—தாயகத்தின் விடுதலையைத் தேடித் தருமாறு வேண்டுகிறேன்."

அடுத்துப் பேசிய தோழியர் தாமரைக்கண்ணி அம்மையார் அவர்கள் அடிகளாரின் தொண்டினைச் சிறப்பித்துக் கூறிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"உலகில் யாராலும் தன்னுடைய தாயைத் துறக்கமுடியாது; ஆணாலும் பெண்ணாலும் தமிழ்த் தாயை—தமிழ் மொழியை — தமிழ் நாட்டை—தமிழ் மக்களை மறக்கவும் முடியாது—துறக்கவும் இயலாது. துறவிகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக நமது அடிகளார் விளங்குகிறார்கள். இவரை நாம் பாராட்டுவது இவரைப் பெருமைப்படுத்த மட்டுமல்ல; இவரை உயர்ந்தநிலையில் இருக்கச் செய்வதற்கு மட்டுமல்ல; இவர் தமிழுக்கும்—நாட்டுக்கும் —இனத்துக்கும் பாடுபட மேலும் ஊக்கமளிப்பதற்காகத்தான் நாம் பாராட்டுகிறோம்; தமிழுக்கு ஆபத்தென்றால் எல்லாத் துறவிகளும் தமிழைக் காப்பாற்ற முன்வரவேண்டுமென்பதற்குத்தான். பொதுவாக தமிழர்கள் எல்லோருக்கும் கொள்கையை மாற்றிக் கொள்ளுங் குணம் கிடையாது; அவ்வகையிலே அடிகளார் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாலும் ஒரே உணர்ச்சியோடு —வீரத்தோடு— தைரியத்தோடு— இளமையோடு வாழ்ந்து நாட்டுக்குப் பாடுபட வேண்டுமென விரும்புகிறேன்."

பின்னர் வாணியம்பாடி வி. எஸ். விசுவநாதம் அவர்கள், 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் அடிகளாரின் பங்கினை விவரித்தார்.

சுவாமி சண்முகானந்த அடிகள், உண்மைத் துறவிகள்—போலித் துறவிகள் நிலையைப் படம் பிடித்துக் காட்டினார்.

தோழர் கமலநாதன் அடிகளாரை வாழ்த்திப் பேசினார்.

தமிழ்நாடு துறவிகள் சங்கத் தலைவர் தில்லையாடி—சங்கரானந்த அடிகள் பி.ஏ. அவர்கள், 'அடுத்து இந்தி எதிர்ப்புப் போராட்டம நடைபெற்றால் போராட்டத்தில் எல்லாத் துறவிகளும் பங்கு கொள்வர்' என்று உறுதியளித்தார்.

தோழர் பத்மனாபன் அவர்கள் அடிகளாரை வாழ்த்தி தெலுங்கில் கவிதை பாடினார்.

தோழர் கோவிந்தசாமி அவர்கள், அடிகளாருக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பேசினார்.

பின்பு அடிகளார் அனைவருக்கும் நன்றி தெரிவித்து விட்டுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"தமிழன் தமிழனாகவே வாழவேண்டும்; தமிழன் தன்மானத் தமிழனாக வாழவேண்டும்; தமிழன் வள்ளுவர் நெறிநின்று வாழவேண்டும்; அவ்வாறு வாழ்ந்தால் தான்—தமிழர்கள் அவ்வாறு நடந்தால்தான் என்னுடைய ஆத்மா சாந்தியடையும்; நான் மகிழ்ச்சியடைவேன்; நான் மறைந்தாலும் நான் விட்டுச் சென்ற என்னுடைய எண்ணங்கள் வாழும்."

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

தோழர் த. வே. முருகேசன் அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றும்; நன்றி கூறியும் உரையாற்றினார்.

அருணகிரி அடிகள் எழுதிய 'தேசியப் பாடல்களும்—தமிழர் உரிமையும்' எனும் நூலை வெளியிட்டுப் பாராட்டி தோழர் கு. மு. அண்ணல்தங்கோ பேசினார்.

இரயில்வே ஊழியர் வேலைநிறுத்தம்?

புதுடில்லி, அக். 14—

இடைக்கால ஊதிய நிவாரணம், விலைவாசிக்குறைப்பு, அடிப்படை ஊதியத்தில் மாற்றம் ஆகிய கோரிக்கைகளின் அடிப்படையில் அகில இந்திய இரயில்வே ஊழியர்கள், வரும் டிசம்பர் 14-ந் தேதிமுதல் வேலைநிறுத்தம் மேற்கொள்ள முடிவுசெய்துள்ளனர்.

இரயில்வே ஊழியர் கூட்டுறவு ஸ்தாபனத்துடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்களுக்கு இம்முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மக்கள் சபை தேர்தல் முடிவுகள்

கம்யூனிஸ்டு தோல்வி

சென்னை, அக். 14—

தஞ்சை மக்கள் சபைத் தொகுதிக்கான தேர்தலின் முடிவு வெளியாகியுள்ளது.

காங்கிரஸ் அபேட்சகர் திரு. வைரவன் சேர்வை 65,845 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளார்,

கம்யூனிஸ்டு, கட்சியைச்சேர்ந்த மணலி கந்தசாமி 46,695 வாக்குகள் மட்டுமே பெற்று தோல்வியுற்றார்.

இந்தியா முழுவதிலும் ஒரேவிகித விற்பனை வரி?

புதுடில்லி, அக்.12—

இந்தத் திங்கள் இறுதியில் மாநில நிதி அமைச்சர்களின் மாநாடு டில்லியில் நடைபெறும், பல்வேறு கட்டங்களில் விற்பனை வரி விதிக்கப்படுவதற்கு மாறாக, பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடத்திலேயே விற்பனை வரி விதிக்கப்படவேண்டும் என்ற யோசனை இந்த மாநாட்டில் ஆராயப்படும்.

மேலும், இந்தியா முழுவதிலும் ஒரேவிகித விற்பனைவரியும் விதிக்கப்படுவதற்கான வழிகளும் காணப்படுமாம்.

அரசாங்க ஊழியர்களுக்கு மற்றெரு தடை?

புதுடில்லி, அக். 14—

அரசாங்கத்தின் அதிகார பூர்வமான ஒப்புதல் பெற்ற சங்கங்களில் மட்டுமே அரசாங்க ஊழியர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமாம்!

மற்ற போட்டி சங்கங்களிலோ, புதியசங்கங்களிலோ யாரும்சேரக் கூடாது என்றும், ஏற்கனவே சேர்ந்திருப்பவர்கள் விலகிக் கொள்ள வேண்டும் என்றும், இதை மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

இதற்கான சட்டமும் பாராளு மன்றத்தில் கொண்டுவரப்படுமாம்!

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

பூதலூர் :

2—10—57.ல் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் கோவிந்தசாமி தலைமையில் நடந்தது. தோழர்கள் முத்தண்ணன், புதுக்கோட்டை நாகராசன், என். எஸ். இளங்கோ, சி. பி. சிற்றரசு ஆகியோர் இந்தியைக் கண்டித்துப் பேசினர்; தீர்மானங்கள் பல நிறைவேற்றப் பட்டன.

தண்ணீர்ப்பள்ளி :

3—10—57-ல், தோழர் சி. பி. சிற்றரசு கொடியேற்றியபின் கூட்டம் தோழர் வை. இராசு அவர்கள் தலைமையில் நடந்தது.

தோழர்கள் தி. வி. முத்துக் கிருட்டினன், சி. பி. சிற்றரசு ஆகியோர் வடவாதிக்கம், இந்தியின் மூலம் வேரூன்றப் பார்ப்பதைக் கண்டித்துத் தக்க ஆதாரங்களோடு பேசினர்.

குரூர் :

கழகத் துவக்க விழா

4—10—57-ல், தோழர் சி. தம்புசாமி தலைமையில் கழகத் துவக்கவிழாக் கூட்டம் தொடங்கியது.

தோழர் எடமலை இளங்கோவன் கொடியேற்றிவைத்துப் பேசினர்.

தோழர்கள் வெங்கட்ராமன், ஆதிமூலம், சி. பி. சிற்றரசு ஆகியோர் கழகத்தின் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

திருச்சி :

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் நபிகள் நாயகம் பிறந்த தின விழாவில் கலந்துகொண்டு, சமுதாயம் விழிப்படைந்ததன் காரணத்தையும், இஸ்லாம் மதம் மக்களுக்குச் செய்த நன்மைகளையும் பல ஆதாரங்களோடு விளக்கிப் பேசினர்.

மாதர் வேலூர் :

8—10—57-ல் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் கொடியேற்றியபின் கூட்டம் தோழர் நா. சிகாமணி அவர்கள் தலைமையில் தொடங்கியது.

தோழர்கள் சுப்பையா, மாசிலாமணி, சோமசுந்தரம், கோபாலன், பாலகுருசாமி, சி.பி. சிற்றரசு ஆகியோர் கழகக் கொள்கைகளையும், இந்தியை எதிர்த்தும் தக்க சான்றுகளோடு பேசினர்.

க. அன்பழகன் எம்.எல்.ஏ., சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் விவரம்

★

திருச்சி :

28—9—57 மாலை 4½ மணிக்கு திருச்சி தெப்பக்குளம், அன்பழகன் படிப்பகத்தின் செயலாளரும் நிர்வாகிகளும் அழைத்ததற்கிணங்க பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களும், எம். எஸ். மணி அவர்களும் படிப்பகத்தைப் பார்வையிட்டனர்; படிப்பகத் தோழர்கள் மாலை அணிவித்து வரவேற்றனர்; படிப்பகத் தோழர்களின் முயற்சியினை அன்பழகன் அவர்கள் பாராட்டி சில நிமிடங்கள் பேசினர்.

லால்குடி(கழகக்கூட்டம்):

அன்று இரவு 7 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், தோழர் வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்திலிருந்தே கனத்த மழை பெய்தும் கூடியிருந்த மக்கள் இறுதிவரை கலையாமலிருந்து கூட்டத்தைச் சிறப்பித்துக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

தோழர் எம். எஸ். மணி சிறிது நேரம் பேசியபின் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும், இந்தித் திணிப்பால் உண்டாகும் தீமையினை விவரித்தும் விரிவுரையாற்றினர்.

கூட்டத் துவக்கத்தில் சுமார் 20-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அன்பழகன் அவர்களுக்கு அணிவிக்கப் பட்டன.

முசிரி பஞ்சாயத்துத் தலைவர்கள் மாநாடு

29—9—57 காலை 9½ மணியளவில் திருச்சி—முசிரி வட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள்மாநாட்டில் தோழர் அன்பழகன் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர்.

காடுபட்டி தி. மு. கழகத் துவக்க விழா

30—9—57 மாலை 6 மணிக்கு, காடுபட்டி தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் கே. எம். அண்ணாவி தலைமையில் நடைபெற்றது. முதலில் தோழர் க. அன்பழகன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

தோழர் அன்பில்.தர்மலிங்கம் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசியபின் தோழர் அன்பழகன் திறப்புரையாற்றி கழகத்தைத் துவக்கி வைத்தார்.

தலைவர்களுக்குக் கைத்தறி ஆடைகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன. செயலாளர் தோழர் கே. ஆர். சின்னையன் நன்றி கூறினர்.

காட்டுப்புத்தூர் தி. மு. க. பொதுக்கூட்டம்

30—9—57 மாலை 7½ மணிக்கு, காட்டுப்புத்தூர் சாவடி மைதானத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் கே. என். தங்கவேல் தலைமை தாங்கினர்.

'10 ஆண்டு சுதந்தரம்' எனும் பொருள் குறித்து உன்னியூர் தோழர் அதிகமான் பேசினர்; அடுத்து, தோழர் அன்பில்-தர்மலிங்கம் அவர்கள் 'பேசத் தெரியாதவர்கள் எனும் பொருள் குறித்துப் பேசினர்; அடுத்து, தோழர் அன்பழகன் அவர்கள் 'சட்ட சபையில் நாம்' எனும் பொருள் குறித்துப் பேசினர்.

கூட்டத்தில் களத்தூர், காடுபட்டி, கடாரம் ஆகிய கிளைக் கழகங்களின் சார்பில் அன்பழகன் அவர்கட்கு மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன; செயலாளர் நன்றி கூறினர்.

சுல்தான்பேட்டை வள்ளுவர்படிப்பக கூட்டம்

1—10—57 இரவு 7 மணிக்கு, வேலூர் (சேலம்) சுல்தான் பேட்டை வள்ளுவர் படிப்பகச் சார்பில் சிறப்பு விழாப் பொதுக் கூட்டம் தோழர் ப. மாரியப்பன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் தமிழ்மொழி, வி. ஏ. இராமநாதன், பொத்தனூர்-சிவப்பிரகாசம், புதுமைவாணன், வழக்கறிஞர் டி. பி. எஸ். பழனிச்சாமி ஆகியோர் பேசிய பின்னர், தோழர் க. அன்பழகன் அவர்கள் பேச எழுந்ததும் வேலூர் தி. மு. கழகம், வள்ளுவர் படிப்பகம், ஊஞ்சப்பாளையம தி. மு. கழகம் ஆகியவற்றின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி போர்வையும் அணிவிக்கப்பட்டன.

தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு தோழர் அன்பழகன் நன்றி தெரிவித்துவிட்டு, குறள் நெறி குறித்தும சட்டசபை நடவடிக்கைகள் பற்றியும் அரியதோர் சொற்பொழிவாற்றினர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் மறைவுக்கு கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கருங்காலிப்பட்டு பஞ்சாயத்துத் தேர்தல்

கழகத் தோழர் தலைவரானர்

கடந்த 30—9—57-ல் விழுப்புரம் தாலுகா கருங்காலிப்பட்டு கிராமப் பஞ்சாயத்துத் தேர்தலில் நம் கழகத் தோழர் எஸ். ஆதிகேசவன் தலைவராகவும், தோழர்கள் திருக்காமி நாயுடு, வடிவேலுபிள்ளை, ஆறுமுக கவுண்டர், சிவராம பிள்ளை, சின்னையன், சுப்பிரமணியன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் செஞ்சி பஞ்சாயத்து ஆபீசர் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

முக்கூடல் ஊராட்சி மன்ற இடைத் தேர்தல்

கழகச் செயலாளர் வெற்றி

முக்கூடல், அக். 7—

முக்கூடல் ஊராட்சி மன்றத்தில் காலியாக இருந்த உறுப்பினர் பதவிக்கு 15-வது வார்டில் முக்கூடல் தி. மு. கழகச் செயலாளர் தோழர் மா. சு. முத்துக்குட்டியும், தோழர் சு. இராமச்சந்திரன் என்ற காங்கிரசுக்காரரும் போட்டியிட்டனர்.

4—10—57-ல் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்தல்நடந்தது. 5—10—57-ல் வாக்குகள் எண்ணப்பட்டன; தோழர் மா. சு. முத்துக்குட்டிக்கு 289 வாக்குகளும், தோழர் சு. இராமச்சந்திரனுக்கு 263 வாக்குகளும் கிடைத்தன.

தோழர் மா. சு. முத்துக்குட்டிக்கு வெற்றி எனத் தெரிந்தவுடன் கழகத் தோழர்கள் தி. மு. கழகக் கொடிகளை ஏந்தி மாபெரும் ஊர்வலமாக சிலம்ப விளையாட்டுகளுடன் சென்றனர்; வெற்றி பெற்ற தோழருக்கு மலர்மாலைகளும், கைத்தறி துணிகளும் அணிவிக்கப்பட்டன. வெற்றியின் அறிகுறியாக இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன.

கோவை—பீளமேடு தி.மு. கழகப் பொதுக்கூட்டம்

2—10—57 மாலை 7-மணிக்கு, பி. என். இராமனுசம் தலைமையில் கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர் க. அன்பழகன் அவர்கள் முதுகுளத்தூர் பரமக்குடி வட்டங்களில் நடந்த கலவரத்தைக் குறித்தும், அரசாங்கம் நடந்துகொண்ட முறை குறித்தும் கண்டித்துப் பேசினர்.

தோழர் எஸ். ஏ. இராமாணிக்கம் அவர்கள் கழக இலட்சியத்தை விளக்கிப் பேசியபின், செயலாளர் நன்றி கூறினர்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்பு

தொழில் நுட்பமுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உண்டாம்

சென்னை, அக். 12—

தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் உள்பட 25 பேர்களுக்குப் போல்ட்டுகள், நட்டுகள் உற்பத்தி செய்யும் தொழிலிற் பயிற்சி அளிக்க, சென்னை மாநிலத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்ட திருபெரும்புதூரில் ஒரு தொழிற்சாலை நிறுவப்படுமாம். இதற்காக ரூ. 1,15,000 செலவிடப்படுமாம்.

பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 30 உதவி ஊதியம் தரப்படுமாம்.

ஐ. நா.-வில் இப்படி!

நியூயார்க், அக். 12—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியமான இலக்குகளை நிறைவேற்றுவதற்கு இந்தியா தனது உள்நாட்டு வளத்தை வளர்ச்சி செய்துக் கொண்டுள்ளது" என்று, ஐ. நா. சபையில் இந்தியப் பிரதிநிதி அறிவித்துள்ளார்.

இந்தியாவில் காகிதக்கூழ் உற்பத்தித் தொழிற்சாலை

எங்கு நிறுவப்படும் ?

டோக்கியோ, அக். 12—

ஜப்பானில் உள்ள தொழில் அதிபர்கள் இந்தியாவில் ஒரு காகிதக் கூழ் உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்தத் தயாராக உள்ளனராம்!

இந்தியாவில் விளையும் மூங்கிலிலிருந்து காகிதக் கூழ் தயாரிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது இந்தியா ஆண்டு தோறும் 76,000 டன் காகிதக் கூழ் இறக்குமதி செய்து வருகிறது.

தென்னாட்டின் பல பகுதிகளில்—குறிப்பாக சேலத்தில் காகிதம் உற்பத்தி செய்யக் கூடிய மூங்கில் கிடைப்பது தெரிந்த ஒன்றாகும். இந்தியப் பேரரசு, ஜப்பானின் உதவியை வழக்கம் போல் வடநாட்டிற்கே பயன்படுத்துமா என்பது இன்னும் தெரியவில்லை.

1958-59-ம் ஆண்டுக்கான அபிவிருத்தி திட்டங்கள்

மாநில அரசுகளுக்குத் திட்டக் குழு தாக்கீது

புதுடில்லி, அக். 12—

இந்தியாவுக்குள்ள அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு 1958-59-ம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்குமாறு மாநில அரசாங்கங்களுக்கு திட்டக் குழு தாக்கீது அனுப்பியுள்ளது. அந்தத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி உதவியையும் மதிப்பிட்டு அறிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

கைத்தொழில் நிறுவனங்களுக்கு உதவி தரப்படுமாம்!

தொழில் வாரியாக ஒரு விவரம்

சென்னை, அக். 12—

கைத்தொழில் அமைப்புகளுக்கு ரூ. 2,65,000 வரை உதவித் தொகை அளிப்பதென்று கைத்தொழில் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

தையல், பூவேலை, நூல் உற்பத்தி, ரேடியோ தயாரிப்பு, ஆலை இயந்திரக் கருவிகள், சுகாதாரக் கருவிகள், கேட் வால்வு முதலியன உற்பத்தி செய்யும் தொழில்கள்; காகிதப் பைகள், காகித உறைகள் 'வாட்டர் புரூப்' முதலியன செய்யும் தொழில்கள்; நெல் வேகவைக்கும் டாங்கிகள், வெல்லம் முதலியன தயாரிக்கும் உலைகள் லாரிகளுக்கு 'உறுப்பு' கட்டும் தொழில் மரச்சாமான் தயாரிக்கும் தொழில் முதலியவைகளுக்கு இந்த உதவியளிக்கப்படுமாம்!

அன்பளிப்புகள்

திருமணங்கள்

★

சேலம்—ஆத்தூர் வட்டம், மல்லியக்கரையில் தோழர் இரா. அருணசலம்—தோழியர் செலம்பாயி திருமணம் 5—9—57-ல், தோழர் டி. இருசப்பன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் எம். ஆர். மாணிக்கம், எஸ். ஏ. வி. வேலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்குரூ. 1வழங்கப்பட்டது.

* * *

அருப்புக்கோட்டைத் தோழர் ப. சு. பொன்னுச்சாமி—தோழியர் தமிழ்த்தாய் திருமணம் 8—9—57-ல், தோழர் எம். எஸ். இராமசாமி தலைமையில் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

* * *

காட்டுமன்னார்குடி தோழர் இரா. நல்லதம்பி — தோழியர் சின்னப்பெண் திருமணம் 11-9-57-ல், தோழர் சோழக்கூர் வேலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 வழங்கப்பட்டது.

* * *

நீர்முள்ளிக்குட்டை தி. மு. க. கிளைச் செயலாளர் தோழர் பி. எம். இராமநாதன்—தோழியர் வி. செல்லம்மாள் திருமணம், 16—9—57-ல் நடைபெற்றது; தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம், ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

* * *

திருப்பூர், ஒடக்காடு பங்களா ரோடு, 1-வது இல்லத்தில் 30-8-57ல், தோழர் எஸ். முத்துசாமி—தோழியர் பி. தங்கமணி திருமணம் நடந்தேறியது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

★

புதுமனை புகுவிழா

திண்டிவனம் வட்டம் நயினார் பாளையம் தோழர் கோ. நாராயணசாமி அவர்களின் புதிய இல்லத்தில் 16-9-57ல் தோழர் இரத்தின-பாலகுருசாமி தலைமையில் புதுமனை புகுவிழா நடைபெற்றது. மூடச் சடங்குகளை ஒழித்து, அறிவுக்குகந்தவகையில் வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் யாவும் நடக்கவேண்டுமென்றும், பகுத்தறிவுக் கருத்துக்கள் நாடெங்கும் பரவவேண்டியதன் அவசியம் குறித்தும் புதுவை தி. மு. க. செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அளிக்கப் பட்டது.

* * *

சேலம் மாவட்டம், கொளத்தூருக்கடுத்த தார்காடு சுந்தரபுரத்தில், டி. எம். எம். லாரி உரிமையாளர் தோழர் டி. எம். முத்துசாமி அவர்களின் புதுமனை புகுவிழா நடைபெற்றது; தோழர் கோவை-செழியன் சொற்பொழிவாற்றினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

'நம் நாடு' இதழ்

விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம்நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணபித்துக் கொள்க :—

பூதலூர்
திண்ணனூர்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேளூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சத்திரப்பட்டி

—நிர்வாகி : 'நம் நாடு'

‘நாடு தனி உரிமை பெற்ருல்தான் பாட்டாளி வாழ்வு மலரும்’

‘தொழிலாளரை நசுக்கத்தான் இந்நாட்டுச் சர்க்காருக்கு உரிமை இருக்கிறது’

‘நெசவாளர்களிடத்தில் இரத்தபாசம் கொண்டது தி. மு. கழகம்’

—சைதையில் துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

5—10—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை—சைதாப் பேட்டை கே. வி. கே. சாமி படிப்பகத்தின் சார்பில், குளக்கரைத் தெருவில் நடைபெற்ற கே. வி. கே. சாமி நினைவு நாள் கூட்டத்தில் துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசியதன் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

“‘இந்தப் பேட்டையிலே கடந்த சில தினங்களாக நெசவாளர்களுக்கு வேலையில்லை; ரூ. 10 இலட்சம் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. நெசவாளர்கள் வேலை கிடைக்காமல் பட்டினி கிடக்கிருர்கள்’ என்று எனக்கு முன்பு பேசிய தோழர்கள் குறிப்பிட்டார்கள். இதற்குக் காரணமென்ன? தேங்கிக் கிடக்கும் சரக்கை விற்க வெளிநாட்டு வியாபாரிகளிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள இந்த மாநில சர்க்காருக்கு உரிமை இல்லை; தேங்கிக்கிடக்கும் துணிகளை வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய உரிமையில்லை; ஆனால், தமிழரின் தன்மானத்தை அவ்வப்போது ஏற்றுமதி செய்து கொண்டிருக்கத்தான் இங்குள்ள காமராசர் சர்க்காருக்கு உரிமையிருக்கின்றது; வேறு எதற்குமில்லை.

“நெசவாளர் மட்டுமல்ல; எல்லாத் தொழிலாளருக்கும்—பாட்டாளிகளுக்கும் நல்வாழ்வு கிடைக்க வேண்டுமானால், நாடு தனியுரிமை பெற்ருல்தான் முடியும். தனியுரிமை பெறுதவரையில் இந்நாட்டில் எந்தத் தொழிலாளரும் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியாது.

“திரு. இராசகோபாலாச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலத்தில், ‘கரை போட்ட வேட்டி, சேலைகளைக் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும்’ என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினர்; அதை எல்லாக் கட்சியினரும் ஆதரித்தார்கள்; ஆனால் டெல்லி அரசாங்கம் அந்தத் தீர்மானத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டது. இது உண்மையிலேயே சுதந்தர சர்க்காராக இருக்க முடியுமா?

“சுதந்தர சர்க்காராக இருக்குமானல் என்ன நடந்திருக்கும்? இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானம் இங்கேயே—யார் அனுமதிக்கும் காத்திராமல் அமுலாக வேண்டும். அதுதான் சுதந்தர சர்க்காராகும். இதுதான் தி.மு கழகத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

“வேலை இல்லை—பட்டினி—பசி என்று கூறி நெசவாளிகள் ஊர்வலம், கிளர்ச்சி நடத்தினல், அவர்களை மண்டையிலடித்து அடக்கத்தான் இந்த நாட்டு சர்க்காருக்கு உரிமையிருக்கிறதே தவிர, அவர்களின் தேவையை நிறைவேற்றிவைக்க உரிமைகிடையாது. எல்லாம் டெல்லி சர்க்காரின் கையில்தான் இருக்கின்றன.

“இந்த நாட்டைக் காங்கிரசுக்காரர்களே ஆட்டும்; ஆனல் உரிமை பெற்று வாழட்டும் என்றுதான் நாங்கள் கூறுகிருேம்.

“தி. மு. கழகம் நெசவாளர் பிரச்சினையில் மிகுந்த அக்கறை செலுத்திவருகிறது. நெசவாளர்களோடு இரத்த பாசம்—நீங்காத் தொடர்பு கொண்டது தி. மு. கழகம். இதை இந்த நாடே சொல்லும்; ஏன், சர்க்காருக்கே இது தெரியும்.

“நெசவாளரின் துயரைத் துடைக்க உண்மையில் பாடுபட்டது தி. மு. கழகம்தான். கைத்தறி ஆடைகளை ஏந்தி தெருவிலே நாங்கள் விற்றிருக்கிருேம், நெசவாளர் பிரச்சினையை சர்க்காரும் நாடும் அறிந்துகொள்வதற்காக! தஞ்சையில் புயலால் அவதியுற்ற மக்களுக்கு உதவுவதற்காக ரூ. 25,000 பெறுமான கைத்தறித் துணிகளை வாங்கியளித்தோம். என்றும் நாங்கள் நெசவாளிகளின் பக்கமேயிருப்போம்.

“தேர்தல் நேரத்திலே உங்களிடம் ஓட்டுக் கேட்க வந்தார்களே காங்கிரஸ்காரர்கள், அவர்களெல்லாம் இப்பொழுது எங்கே போனர்கள்? உங்களைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. தேர்தல் நேரத்தில்தான் உங்களிடம் அவர்கள் நெருங்குவார்கள். இப்பொழுது நீங்கள் வேலையில்லாமல் அவதிப்படுகிறீர்கள். இது அவர்களுக்குத் தெரியாது. தெரிந்துகொள்ளவும் மாட்டார்கள்.

“எனவே, நெசவாளர்களாகிய நீங்கள் நல்வாழ்வு பெற, நாடு தனியுரிமை பெற்ருக வேண்டும்; அதற்காகப் பாடுபட்டுவரும் தி. மு. கழகத்துக்கு நீங்களெல்லாம் ஆதரவு தந்து, ஒத்துழைக்க வேண்டும்.”

அவர் தொடர்ந்துபேசுகையில், இந்தித் திணிப்புப் பற்றியும், இந்தியை எதிர்த்து தி. மு. கழகம் தொடுக்க இருக்கும் போராட்டத்தைக் குறித்தும் விளக்கி, தமிழ் மக்களனைவரும் தமிழரின் தன்மானப் போராட்டமான இந்தி எதிர்ப்பில் கலந்துகொள்ளத் தயாராக இருக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பேச்சின் துவக்கத்தில் மாவீரன் கே. வி. கே. சாமியின் சிறப்பியல்புகளையும், அவரது அரிய தொண்டினையும் எடுத்துக்கூறி, எல்லோரும் சாமியைப்போல் தொண்டாற்ற ஆர்வம் கொள்ள வேண்டுமென வலியுறுத்தினர். மற்றும், டெல்லி ஆதிக்கத்தையும் வரி உயர்வையும் கண்டித்துப் பேசினர்.

கூட்ட விவரம்

கே. வி. கே. சாமி படிப்பகத்தின் சார்பில் நடத்தப்பட்ட இந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தோழர் ஏ. எஸ். ஜேசுபாதம் தலைமை வகித்தார்.

தோழர் பி. அண்ணுமலை பேசுகையில், சைதைவாழ் நெசவாளர்களின் துயரநிலையை எடுத்துரைத்தார். இதற்குப் பரிகாரம் காணமுடியாவிட்டால், விரைவில் ஓர் சர்வ கட்சிக் கூட்டம் நடத்தி, இதற்கென ஓர் போராட்டமும் நடத்த நேரிடலாம் என்று அறிவித்தார்.

நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரால் கால்கோள் விழா ஆற்றப்பட்ட ‘குமரன் நெசவாளர் காலனி’யில் மாதம் ரூ. 33 கட்டக்கூடிய நெசவாளிக்குத் தான் வீடு கிடைக்கிறது என்பதைக்கூறிக் கண்டித்தார்.

தோழர் சைதை சம்பந்தம் பேசுகையில், குறிப்பிட்டதாவது :—

“கடந்த நான்கு நாட்களாக இந்தப் பகுதியிலுள்ள நெசவாளர்களெல்லோரும் வேலையில்லாமல் அவதிப்படுகிருர்கள். நெசவாளர் சொசைட்டிகளெல்லாம் திட்டென்று கதவடைக்கப்பட்டுள்ளன—ஏனென்று கேட்டால் 15,000 பீஸ் துணிகள் சொசைட்டிகளில் விற்பனையின்றி தேங்கிக் கிடப்பதாகக் கூறுகிருர்கள். இதனல் நெசவாளர்களுக்குப் பாவு கிடைக்கவில்லை. தறியாளர்கள் வாழ்வதா, சாவதா என்று புரியவில்லை.

“இந்த நாட்டில் 12 இலட்சம் தறிகள் இருக்கின்றன. சர்க்கார் கணக்குப்படி 7 இலட்சம்தான் என்ருலும். ஒரு தறியை நம்பி ஒரு குடும்பம் வாழ்கிறது. ஒரு குடும்பத்தில் குறைந்தது 4 பேர்களாவது இருக்கிருர்கள். இவர்கள் கதி என்ன ஆவது? தறிக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கூலியும் குறைந்துவிட்டது.

“எனவே, இதற்கெல்லாம் ஒரு பரிகாரம் தேடியாக வேண்டும். இதற்கென ஒரு சர்வகட்சி சங்கமும் நிறுவியிருக்கிருேம். இனி நெசவாளர்கள் காங்கிரஸ் கட்சியை நம்பிப் பயனில்லை; சர்க்காரும் எதுவும் செய்துவிடப் போவதாகத் தெரியவில்லை. நெசவாளர்கள்பற்றி அவர்கள் கொடுக்கும் தகவல்களும், புள்ளிவிவரங்களும் வெறும் கண்துடைப்பாகத் தானிருக்கின்றன”

தோழர் டி. வி. நாராயணசாமி பேசுகையில், கே. வி. கே. சாமியின் உயரிய பண்புகளையும், அவர் நாட்டுக்கும், கட்சிக்கும் செய்த சேவைகளையும் விவரித்து, தி.மு. கழக இலட்சியங்களை விளக்கி, திராவிட நாடு பிரியவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

இறுதியாக நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

சிரிய எல்லையில் துருக்கியின் தாக்குதல்!

தற்காப்பிற்கு எகிப்திய - சிரிய இராணுவக் கூட்டு

கெய்ரோ, அக். 13—

சிரிய-துருக்கி எல்லையில் துருக்கி இராணுவத்தினர் தொடர்ந்து தாக்குதல்கள்நடத்தி வருவதை ஒட்டி, சிரியாவுக்கு உதவியாக எகிப்து தனது இராணுவத்தை அனுப்பிவைத்துள்ளது.

துருக்கி ஆத்திரமூட்டுகிற செயல்களில் ஈடுபடுவதாக சிரியா தெரிவித்துள்ள கருத்தை எகிப்தும் ஆதரித்திருக்கிறது.

சிரியாவின்மீது துருக்கி படையெடுக்குமானல், அந்தத் தாக்குதலை சிரியாவும்—எகிப்தும் கூட்டாகச் சமாளிப்பது என முடிவு செய்யப்பட்ட திட்டத்தின்படியே இப்போது, எகிப்து இராணுவம் சிரியா வந்துள்ளது எனக் கூறப்பட்டிருக்கிறது.

எல்லையோரத்தில் ஏராளமான துருப்புகளைக் குவித்திருப்பதாகத் துருக்கி மீது சிரியா, ஐ.நா. சபையில் புகார் செய்துள்ளதும்,துருக்கியின் போக்கினை ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் குருஷ்சேவ் வன்மையாகக் கண்டித்திருப்பதும் தெரிந்ததே!

வறுமையே காரணமாம்!

சென்னை, அக். 15—

“இராமநாதபுர மாவட்டத்தில் நடைபெற்ற சாதிச் சண்டைக்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரச் சீர்குலைவே” என்று, மத்திய இரயில்வே அமைச்சர் செகசீவன்ராம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தை மற்ருெரு மத்திய அமைச்சரான தத்தார் எதிர்த்துள்ளார்.

அரசாங்க அதிகாரிகளின் பெயரிடக்கூடாது!

வீதிகள், சாலைகள், நகர்ப் பகுதிகள் பொது நிறுவனங்கள், மண்டபங்கள் போன்றவைகளுக்கு அரசாங்க அதிகாரிகளின் பெயரை இடக்கூடாது என்று மாநில அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சுருட்டுத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

பொறையாறு அக். 14—

பொறையாற்றில் 7 சுருட்டுக் கம்பெனிகளில் வேலைசெய்யும் சுமார் 85 சுருட்டுத் தொழிலாளர்கள் 7—10—57 முதல் கூலி உயர்வுக்காக அமைதியாய் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். நாகப்பட்டினம், காரைக்கால் முதலிய ஊர்களில் நடைமுறையில் இருப்பதுபோல, 1000 சுருட்டுகளுக்கு ரூ. 2—5—0 கூலி குறைந்த பட்சமாகத் தரவேண்டும் என்பதே தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கையாகும். இப்போது பொறையார் சுருட்டுக் கம்பெனிமுதலாளிகள் தரும் கூலி ரூ. 2—0—0.

11—10—57-ல் திருச்சி தொழில் சமரச அதிகாரி பொறையாறு வந்து முதலாளிகள்—தொழிலாளர்களைக் கூட்டாகச் சந்தித்து சமரச முயற்சிக்கு நடவடிக்கை எடுத்தும் பலன் ஏற்படாததால் தொழில் கோர்ட்டுக்குப் இப்பிரச்சினையை எடுத்துச் செல்வதாகக் கூறினர். தொழிலாளர்கள் தொடர்ந்து சட்டுக்கோப்பாய் வேலைநிறுத்தம் செய்துவருகிருர்கள். (ந-நி.)

‘நாளி மார்க்’ நிர்வாகத்தின்

விபரீதப் போக்கு

திருச்சி, அக். 14—

திருச்சி நாளி மார்க் சோடா தொழிற்சாலையில் வேலைசெய்து வந்த 16 தொழிலாளர்களை நிர்வாகத்தினர் சரியான காரணமின்றி இன்று திடீரென வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள்.

இதை எதிர்த்து, மற்றத் தொழிலாளர்கள் ஒன்றுகூடி, நீக்கப்பட்ட தொழிலாளர்களை திரும்ப வேலைக்கு எடுக்கும்வரையில் வேலைநிறுத்தம் செய்வதென முடிவு செய்துள்ளார்கள். (ந.நி.)

டால்மியாபுரத்தில் 53 பேர் கைது!

திருச்சி, அக். 14—

டால்மியாபுரத்தில் கல் உடைக்கும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியதால், 19 பெண்கள் உள்பட 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 33 பேர் மீது குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரசபைக்கு சர்க்கார் கைவிரிப்பு!

சென்னை, அக். 15—

கட்டிடங்கள், மார்க்கெட்டுகள், தண்ணீர் வசதி, சாக்கடை, மற்றும் நகர் அமைப்பு சம்பந்தமாக சென்னை நகரசபை திட்டமொன்று தயாரித்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான ரூ. 31 இலட்சத்தை வெளிப்படை மார்க்கெட் நிறுவனத்தில் கடனாகச் சேகரிப்பது என்று முடிவு செய்து, சென்னை அரசாங்கத்தின் அனுமதியைக் கோரியிருந்தது.

ஆனல் சென்னை அரசாங்கம், கடன் எழுப்பும் யோசனையை ஏற்க மறுத்துள்ளது.

1958—59-ம் ஆண்டு சென்னை மாநில வரவு-செலவுத் திட்டத்தில் நகரசபை ஆணையாளர் விரும்பும் திட்டங்களில் சிலவற்றை நிறைவேற்றுவதற்குப் பணம் ஒதுக்கப்படலாம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளதாம்.

இந்தி பேசப்படாத......

(-1ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்தி பேசப்படாத பகுதிகளில் இந்தியைப் பரப்புவதே இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாம்!

இந்த விவாத அரங்குகளில் பொதுவாக 12 பேர் கலந்து கொள்வார்களாம்!

இதற்காக 7 பேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கழகக் கூட்டங்கள்

★

காளிங்கராயன்புதூர் :
அண்ணு திடலில்
17—10—57 மாலை 5 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
அன்பரசு

★

ஒலகடம் :
காந்தி மைதானத்தில்
16—10—57 இரவு 7 மணிக்கு
தலைவர் :
எஸ். ஆறுமுகப்பெருமாள்
பேசுவோர் :
ப. கண்ணன்
இரா. ஈசுவரன்

★

பொறையாறு :
பத்தாய்மரைக்காயர் தெருவில்
சுருட்டுத் தொழிலாளர் வேலைநிறுத்த ஆதரவுக் கூட்டம்
16—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கே. சி. சுப்பிரமணியம்
பேசுவோர் :
எம். எஸ். மணி
இரே. சத்துருசங்காரவேல்
சி. ஜெம்பு

வேண்டுகோள்

ஓராசிரியர்களின் குறைகளைப் போக்க அமைச்சர்களைப் பேட்டி காண இருக்கிருேம். ஆகையால் இம்மாதம் நடக்கவிருக்கும் சட்டமன்றம் செல்லவேண்டியதால் எல்லா மாவட்டங்களிலிருந்தும் குறைந்தது ஒவ்வொரு பிரதிநிதியாவது கலந்துகொள்வதுடன், அவர்கள் பின்கண்ட முகவரிக்கு செய்தி அறிவிக்க வேண்டுகிருேம்.

முகவரி —கை. சி. கணேசசங்கர், தலைவர், நூதுக்குழு, அரசினர் பயிற்சிப் பள்ளி, மோகனூர்—நாமக்கல் என தோழர் கணேசசங்கர் அறிவிக்கிருர்.

முதலூர் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம்

17—10—57 இரவு 8 மணியளவில், முதலூர் வி. எஸ். திடலில் நடைபெறவிருக்கும் மேற்படி பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கி. மனேகரன், ஜி. ஜேசுதாஸ், இரா. நல்வினைவேல், எஸ். என். இராசன், தளபதி. சேர்மத்துரை ஆகியோர் பேசுவர்.

நடேசன் — எல்லம்மாள் திருமணம்

எஸ். இ. நடேசன் — எல்லம்மாள் திருமணம், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் 11—9—57-ல், திருபெரும்புதூரில் நடைபெற்றது. தோழர்கள் மா. கி. தசரதன், அலமேலு-அப்பாதுரை, இறைமுடிமணி மணமக்களை வாழ்த்தினர். இதன் நினைவாக, ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

இந்தோனேஷிய, இந்தோ-சீனு தலைவர்கள் இந்தியா வருகை

புதுடில்லி, அக். 14—

இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்னே, வரும் டிசம்பர் திங்களில் இந்தியாவுக்கு வருவார் என்றும், டிசம்பர் 12-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை இந்தியாவில் தங்குவார் எனவும் கூறப்படுகிறது.

வட வியட்நாம் குடியரசுத் தலைவரான டாக்டர் ஹோ-சி-மின், அடுத்த ஆண்டு பிப்ரவரித் திங்களில இந்தியாவிற்கு வருவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.